கும் தரவேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டில் இருந்து உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அவார்டு தரப்படுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மற்றொரு கோரிக்கை படியைச் சம்பளத்தோடு இணைக்கப்பட வேண்டுமென்பது. இது எல்லாத் துறையினரையும் பொருத்த பிரச்சினை. இதைச் சம்பளக் குழு கவனித்துக் கொண்டிருக்கிறது. சம்பளக் குழு இது பற்றிய தீர்மானத்தை எடுத்த பிறகு இது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, பி.டி. டிரெயினிங்குக்கு எடுக்கும்போது மூன்று மாதம் தமிழாசிரியர்கள் ஆக வேலை செய்தால்தான் எடுத்துக்கொள்ளுகிற நிலை இருக்கிறது. அது சம்பந்தமாக மாற்றம் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வந்ததா? அரசு அதிலே மாறுதல் செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

Building for Sundhakkudi High School.

* 233 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the construction of a high school building in Sundhakkudi village of Ariyalur Panchayat Union in Tiruchirappalli district was sanctioned in 1963;

(b) the total estimate of the construction; and

(c) whether construction of the school building has been completed?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(அ) ஆம்.

(இ) ரூபாய் 25,000.

(உ) கட்டிட வேலை தரைமட்டம் வரை பூர்த்தி அடைந்துள்ளது. வேலை தொடர்ந்து நடைபெறுகிறது.

திரு. நா. காசிராமன் : இந்தப் பள்ளிக்கூடத்தில் எத்தனை மாணவர்களுக்கான வசதியோடு கட்டடம் கட்டப்படுகிறது? இந்த வேலை எப்போது பூர்த்தியாகும் என்று அரசு உறுதி கூற முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எவ்வளவு மாணவர்களுக்கு என்று குறிப்பு இல்லை. 25,000 ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்படுகிறது. இப்போது தரைமட்ட அளவுக்கு (ஃப்ளோர் லெவல்) வந்திருக்கிறது. இது விரைவில் முடிக்கப் பெறும் என்று தலைமைப் பொறியர் அறிவித்திருக்கிறார்.

திரு. ஆர். கருப்பையா : இந்தக் கட்டடம் தரைமட்ட நிலையிலேயே கடந்த நான்கு ஆண்டுகளாக நின்று வருகிறது. இதைப்பற்றி நாங்கள் பல முறை சர்க்காரிடம் எடுத்துச்

[1970 மார்ச் 6

சொல்லியும் அதே நிலையில்தான் இருக்கிறது. இதுபோன்ற நிலை இங்கு மட்டும் அல்லாமல் பல இடங்களில் இதே போன்று பள்ளிக் கூடக் கட்டடங்கள் முற்றுப் பெறாமலே பல ஆண்டுகளாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் அவசரமாகக் கட்டித் தர வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா? இதை எடுத்த காண்ட்ராக்டரால் தாமதம் என்றால் அந்த காண்ட்ராக்டரை ரத்து செய்துவிட்டு புதிதாக காண்ட்ராக்டுக்கு விட்டு கட்டடத்தைத் துரிதமாக கட்டி முடிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதிலே தேவையற்ற அளவுக்கு காலதாமதம் ஏற்பட்டு விட்டது என்பதைத் தலைமைப் பொறியரே ஒப்புக் கொண்டு வருத்தம் தெரிவித்திருக்கிறார். நாலைந்து ஆண்டுகளாக நின்று கொண்டிருக்கும் நிலையில் அதை விரைவாகக் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்பதற்கான முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. விரைவில் அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படும்.

திரு. நா. காசிராமன்: நான்கு ஆண்டுகள் காலதாமதமானதன் காரணமாக இந்தக் கட்டடத்திற்கான செலவும் அதிகமாகக் கூடும். இந்தக் காலதாமதத்திற்குக் காரணமான காண்டிராக்டர்களிடமிருந்து இந்த நஷ்டத்தைப் பெற அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தக் காலதாமதத்திற்கு யார் காரணம் என்று அறிந்துகொள்ள முடியவில்லை. காண்டிராக்டர் காரணமா, அல்லது அதிகாரிகள் காரணமா அல்லது வேறு காரணமா என்று முடிவு செய்யப்படவில்லை. வழித்தடங்கள் சரியாக இல்லை என்று காரணம் காட்டியிருக்கிறார்கள். அது முழுவதும் பொருத்தமான காரணம் அல்ல. மழைக் காலத்தில் வேண்டுமானால் போக்குவரத்து தடைப்படலாம். மற்றக் காலங்களில் வேலை நடைபெற்றிருக்கலாம். இது 1963–64-லேயே திட்டமிடப்பட்டுள்ள ஒன்று. விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். காலதாமதத்திற்கு யார் காரணம் என்று கண்டுபிடித்து அதற்கு மேல் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசுக் கல்லூரி முதல்வர்கள்.

*234 வினா.—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வகுப்புகளுக்குச் சென்று பாடம் நடத்தாது, அலுவலகக் காரியங்களை மட்டும் பார்த்துக்கொண்டு வருகின்ற அரசினர் கல்லூரி முதல்வர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஒருவருமில்லை.